உ

சிவமயம்.

கோட்டையூர் ஸ்ரீ கொத்தங்கருப்பணசாமி

பதிகமும் நவரெத்னமாலையும்

இஃது

கோட்டையூர் வித்வான் மீனாட்சி சுந்தரமய்யரவர்கள்
புத்திரன்
சுப்ரமண்ய கவியால்
இயற்றப்பெற்றது.

ஸ்ரீமான் தனவைசிய சிகாமணி மு. சி. அ. அளகப்ப செட்டியார்
அவர்கள் குமாரன்
சின்னஞ் செட்டியாரவர்கள்
பொருளுதவியினால்
இந்நூல் அச்சிடப்பட்டது.

[illegible]
[illegible]
[illegible]

உ

சிவமயம்.

கோட்டையூர் ஸ்ரீ கொத்தங்கருப்பணசாமி

பதிகமும்
நவரெத்னமாலையும்

இஃது

கோட்டையூர் வித்வான் மீனாட்சி சுந்தரமய்யரவர்கள்
புத்திரன்
சுப்ரமண்ய கவியால்
இயற்றப்பெற்றது.

ஸ்ரீமான் தனவைசிய சிகாமணி மு. சி. அ. அளகப்ப செட்டியார்
அவர்கள் குமாரன்
சின்னாஞ் செட்டியாரவர்கள்
பொருளுதவியினால்
இந்நூல் அச்சிடப்பட்டது.

உ

சிவமயம்.

முகவுரை.

உலகத்தின்கண் அநேக நாடுகளில் சிறந்த பாண்டிநாட்டின் மிகுதியான நகரங்களுள் மிகச் சிறப்புற்றதான சகல நன்மைகளுக்கும் ஆகரமாய் சின்மயமிகுத்த தன்மபரிபாலன சிகாமணிகளாகிய மகுட தனவைசியாள் புரியும் சகல தர்மங்களும் நிறைந்துள்ள எல்லா நலங்களுக்கும் ஆதாரமாயுள்ள கோட்டையூர் என்னுந் திருநகர்க்கண், சர்வாண்டங்களையும் கடாக்ஷ வீக்ஷயண்யத்தினால் காக்கும் பரம்பொருளாகிய ஸ்ரீ தரனுடைய அம்சத்திற் சிறந்த மகாகாளராகிய கொத்தங்கருப்பண சுவாமி யென்னும் எம்பெருமான் மீது திருப்பதிகமும் நவரெத்ன மாலிகையும் ஆகிய பிரபந்தங்களையும் இன்னும் சில செய்யுள்களையும் ஸ்தோத்திரமாக ஷெடியூர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரமய்யரவர்கள் புத்திரன் வித்வான் சுப்ரமண்யக் கவியினால் இயற்றப்பெற்று ஸ்ரீமான் தனவைசிய சிகாமணி மு. சி. அ. சின்னஞ்செட்டியாரவர்கள் பொருளுதவியினாலும், அவர்களின் முக்கியமான முயற்சிப் பெருமையினாலும் பாடி அச்சியற்றப் பெற்றது.

ஸ்ரீ கொத்தங் கருப்பணசுவாமியினுடைய கடாக்ஷத்தால் சகலருக்கும் நன்மை உண்டாகுக.

சுபம்.

உ

சிவமயம்.

ஸ்ரீமான் மு. சி. அ. சின்னஞ் செட்டியாரவர்கள்
புத்திரன் அழகப்பசெட்டியாரவர்கள்
இயற்றியவை.

வந்தாளு மலர்ப்பொழில்சூழ் வனத்தாளுந் தடங்கரைமேல்
வளத்தாங் கோயில்
நந்தாளுங் காதலத்தெம் நாயகன்கொற் றங்கருப்ப
நம்மான் மீது
தந்தாளும் பதிகமொடு நவரெத்ன மாலையெனத்
தரத்தாம் செய்யுள்
இந்தாளுந் திருமுகத்தான் சுப்ரமண்ய கவிவரத
னியற்றி னானே
அத்தகைய பெருங்கவியைக் கோட்டையூர்த் தனவணிகன்
அதுலன் ஸ்ரீமான்
சித்தநயந் தருபுகழான் இளைசைநித்ய கல்யாணி
சீர்பா தந்தாம்
வைத்தநயந் தருமனத்தான் வள்ளலெண்ணுங் கொடையுடையான்
மதியான் மிக்கான்
புத்தமுதந் தருமொழியான் புலவர்கட்கோர் நிதியனைய
பொற்பான் மேலோன்
பொன்னாளும் புகழ்மாதும் போற்றுபுயன் அழகப்பன்
புரிதவத் தாம்
சின்னஞ்செட் டியாரென்ன செகம்புகழும் திருப்பெயரான்
செல்வன் சொல்லால்
யென்னாளும் புகழ் மருவச் செய்தமைத்தா னத்தகைய
வியல்பான் மிக்க
மன்னாளும் புத்தகத்தை வளமருவும் அச்சியற்றி
மகிழ்ந்தான் வாழி.

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்

இந்நூலாசிரியர் முதன் மாணாக்கன்
ஸ்ரீநிவாசய்யரவர்கள் புத்திரன் வெங்கிட்டராமய்யர்
அவர்களியற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா.

திருவளர் பெருவளம் சிறந்தபொன் னுலகினும்
உருவளர் தருமநன் கோங்கி நலந்தரு
வரந்தரு பெயர்புனை வசுந்தரை தனில்வளர்
தரந்தரு நலங்கலை சார்ந்தநா டளவில
அத்தகைப் பெருவளம் அமைந்தெழில் திருவளர்
எத்தகை நாட்டினும் ஏற்றமிக் குளவாய்
பன்னகா பரணன் பாரபரை முருகவேள்
தன்னதா யரசுசெய் தரம்புனை பெரும்புகழ்
காண்டகு மேன்மை கனந்தரச் செழித்த
பாண்டிய நாட்டிற் பலவளங் குலவிப்
பகர்தரு நகரம் பலவற் றுள்ளும்
நிகர்தர வரிதென நிலவிய நலமலி
கோகன கத்திரு குணஞ்செரி நலத்தினல்
மாகன கம்புனை வளமலிந் துளவென
அந்தண ராலயம் அரசர்தம் மந்திரம்
சுந்தர வணிகர் துதிதரு மனைவளம்
மண்மகள் புதல்வர் வளஞ்செறி வசதியும்
பண்புறச் செழித்துப் பலவறங் குலவியும்
தெய்வாலை யந்தாம் செழித்து விளங்கியும்
மெய்வாய்ந்த சீலர்கண் மேவு நலத்ததாய்

புலவர்கட் கரசன் புரந்தரற் காத்தருள்
நலமலி சுந்தர நாயக னிடந்தனைத்
தானாட்சி தந்தாய் தனியர சாட்சிசெய்
மீனாட்சி யென்றாய் மேவிய மந்திரம்
சிகரி யனந்தமாச் செழித்திடு நலத்தினாற்
சிகர மலிந்தபொற் சிலோச்சயந் தானெனச்
சிறந்தருள் கோட்டையூர்த் திருநக ரதனிடை
அறந்தரு தாட்டிகர் அற்புதப் பொற்பினர்
பேரறி வாளர் பெரும்புகழ் மேன்மையார்
சீரறி பெருமையார் சிறந்தபொன் னலத்தினர்
தனவை சியரெனத் தரந்தரு குலந்தனில்
இனவை சியந்தரு மேற்றசீர்ப் புகழினான்
செல்வத் திறத்திற் செழித்த ருபேரனைக்
கல்வித் திறத்திற் கவின்மிகு சேடனும்
கொடைவளந் தன்னிற் குணஞ்செறி கன்னனைத்
தடையிலா தளிக்கும் தரம்பெறு புகழினான்
பெருமை தரும்புகழ்ப் பேரறி வாளன்
தரும நலந்தரும் சாந்தசற் குணவரன்
வளமலி யிளசையின் வானவர் வாழ்வுறக்
களமலி களந்தனிற் காட்டிய நாயகன்
கயிலாய நாதன் கருணைசெய் திடந்தர
மயிலாய சாயல் வளந்தரு மெழில்புனை
நித்தியகல் யாணிபொன் னேயத் திருவடி
சித்தத் தமைத்தருள் சீருடை வள்ளலான்
அழகப் பேந்திரன் அருந்தவப் பெருந்தகை
கழகத் தாம்புகழ் கவினுடை மெய்யினஞ்
பொன்னஞ் சட்டகம் பொருந்த நலந்தரு
சின்னஞ் செட்டியார் சிறந்தபொற் பெயரினான்
சுற்றுமார் தருக்களார் சோலைசூழ் வாவியின்

நற்றுமேல் கரைக்கணா நலந்தரு கோயிலின்
வித்தகர் போற்ற விமல வரந்தரும்
கொத்தங் கருப்பணன் கோமான் றிருவடிக்
கன்பனா னதனால் அருட்பெறுங் கடவுண்மேல்
நன்பதச் சொற்புனை நயந்தரு செய்யுளாற்
றுதித்தருட் டிறத்தைத் தொல்லுல கம்பெற
மதித்தருட் புலவன் மறையவர் சிகாமணி
நாற்கவி களும்புனை நலந்தரு நாவுடை
மாற்கஞ் சிறக்க வளந்தரு புகழினான்
மீனாட்சி சுந்தர மேலவன் சந்ததி
தானாட்சி தந்தறம் தாம்பயில் சிந்தையான்
சுப்ரமண் யக்கவி தூயற்குச் சொற்றிட
அப்பெருங் கவிஞன் அமைத்தனன் பதிகமும்
நவரெத்ன மாலையாம் நயந்தரு செய்யுளும்
புவனத்தின் மேலாம் புலவர் புகழ்ந்திட
அன்னவாஞ் செய்யுளை அச்சிற் பதித்தருள்
சென்னியிற் சூடுஞ் சிறப்புடை யவர்க்கெலாம்
ஈந்தனன் பொருள்சிறந் தேற்ற மதிப்புடைச்
சாந்தனும் சின்னயத் தனபதி மனமகிழ்
அன்னவன் புத்திரன் அழகப்ப வேளுடன்
நன்மையச் சந்ததி நலம்பெற வாழி

உ

சிவமயம்.

(விநாயகன்)

கோமருவுங் கோட்டையூர்க் கொத்தங் கருப்பணற்கென்
றுமருவும் பாமாலை நாட்டமலர் மாமருவும்
சித்திமுதற் புத்திவளஞ் சேர்ந்தகல்வி வார்ந்துநல்கும்
சத்திமுதற் புத்திரன்பொற் றாள்

(மீனாட்சியம்பாள்)

வஞ்சிதத்தை மாமொழியார் வங்கணத்தால் வந்தலைக்குஞ்
சஞ்சிதத்தை மாற்றிவளந் தந்தளிக்கும் நெஞ்சிதத்தாம்
பொன்னளிக்குந் தாமரைப்பொன் போற்றுகயற் கண்ணியென்தாய்
மன்னளிக்குந் தாட்டா மரை

(சுந்தரேச மூர்த்தி)

பொன்னயத்தாஞ் செல்வம் புரந்தளிக்கும் பொற்புமிக்க
நன்னயத்தாங் கல்வி நயந்தளிக்கும் சொன்னயத்தான்
அந்தரன்பொற் பாலளிக்க ஆகண்ட லற்கருள்செய்
சுந்தரன்பொற் பாதத் துணை

(இளசைநகர் நித்யகல்யாணி)

நலமளிக்கும் வலமளிக்கு மிளசைநகர்க் கயிலாய
நாதன் வாமத்
தலமளிக்குஞ் சிறப்பதனால் விருப்பமுடன் உலகனைத்துந்
தாங்கு மென்தாய்
புலமளிக்கும் பொருளளிக்கும் நித்தியகல் யாணிபதம்
போற்று மேலோர்
தலமளிக்குந் திருவனைத்தும் பெறுவர்நனி மேற்பதமுந்
தாங்கு வாரே

(கயிலாச நாதர்)

வளமருவு மிளைசைநகர் நித்தியகல் யாணியென்தாய்
வாமம் போற்றக்
குளமருவும் விலோசனத்தாற் குமரனைத்தந் துலகனைத்துங்
குலவி யாளத்
தளமருவும் பெருமைதங்க கயிலாய நாதனெந்தை
கமலத் தாளென்
னுளமருவும் கருணையினாற் புகழ்மருவுஞ் செல்வநலத்
துவந்து வாழ்வாம்

(நடராசர் வெண்பா)

பாண்டரங்கத் தாண்டவத்திற் பஞ்ச கிருத்தியத்தை
யாண்டநட ராச வருட்கடலே வேண்டவரு
பொற்சபைக்க ணின்றுபுரி பொன்னடம்போ லென்மனமாம்
அற்சபைக்க ணின்றுபுரிக் தாள்

(கோட்டை நாச்சியம்பாள்)

பொன்மையொன்றும் புகழ்சிறந்து புகலரிய தருமவளம்
பொருந்தி யென்றும்
நன்மையொன்றுங் கோட்டையூர் நாட்டமுற வளர்கிகியாய்
நலங்கொ ளென்தாய்
வன்மையொன்றும் மகிடன்முத லசுரர்தமை வாட்டிவளம்
வானோர்க் காக்கும்
தன்மையொன்றுங் கோட்டை நாயகிசரண மலர்க்கண்மனம்
சாற்றி வாழ்வாம்

(விஸ்வநாதர்)

வாரணவா சியினிருந்து வந்தருளைப் புலவர்கட்கு
வழங்கற் கென்றும்
ஆரணவா சியினிறைந்து புகழ்சிறந்த கோட்டையூர்
அனகர் போற்ற

வாரணவா சியினிலையம் வீற்றிருந்து பொழிலனைத்து
மெழிலிற் காக்கும்
காரணவா சிச்சடிலன் விஸ்வேசன் சரணமலர்
கருத்திற் சேர்ப்பாம்

(விசாலாட்சி)

சங்களக்குஞ் செங்கைகங்கை விஸ்வேசன் அருளளிக்குந்
தனுவிற் பாதிப்
பங்களக்கு மங்கைபொங்கும் பரங்கருணைத் திருவிழியாள்
பரிந்து கீதங்
கொங்களக்கு மரிபாவுங் குந்தளத்தாள் விசாலாட்சி
குலவு மென்தாய்
மங்களக்குங் குமத்தனத்தாள் பதமலரை மதிமலர
மதித்து வாழ்வாம்

உ

சிவமயம்.

(பதிகம்)

பொன்கொண்ட மணிகொண்ட கடலாடை யுடைமாதர்
புவிமாது திருமாமுகப்
பொலிவுபெறு வளமருவு புகழ்நிலவு மொளிகுலவு
புனிதமிகு பாண்டி நாட்டின்
மன்கொண்ட நிலவளம் பொன்கொண்ட புனல்வளம்
மதிகொண்ட மாட மோங்கி
மறையவர்கள் துதிமருவு நிதிமருவு நிலையமுயர்
வானவர் துதிக்கும் வளமாம்
தென்கொண்ட மகுடதன வசியர்புகழ் மிகமகிழ்செய்
செகதலம ததனின் வளரச்
செந்தா மரைச்செல்வி வந்தாள் தரச்செய்ய
திருமருவு சதன மெனவே
கோன்கொண்ட வெழின்மருவு மின்கொண்ட கோட்டையூர்க்
கோமளா கரவென்னையாள்
கொற்றந்த ரும்புலவர் நித்தந்த ரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (1)

அண்டபகி ரண்டமுத லெண்டிசையு மண்டுபுகழ்
ஆகான் சேகரமிசை
அருள்வைத்த நதியினொடு தெருளுற்ற மதிமருவும்
அங்கதம் துங்க விதழி
கொண்ட கோடீரமணி யானருட் பார்வையாற்
கொந்தளத் தெழில் சிறந்த
கோதையா மாதவன் ஓதவே சாதமாம்
கொற்றமா சாத்த னருளால்
மண்டல மதித்தபுகழ் கொண்டமா காளனும்
வள்ளலென வந்த திருவான்

மதிமண்ட லமதுலவு நிதிகொண்ட மதில்சுலவு
வளமண்டு கோட்டை யூர்வாழ்
கொண்டலணி மேனியாய் அண்டர்புகழ் ஞானியாம்
குழகவெனை யருள்செய் திருவார்
கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (2)

நாமளக் கரியவலி தாமடுத் திடுமசுரர்
நாட்டமதை வீட்டி யுலகை
கண்பினொடு காத்தருள்செய் பண்பினிசை யேற்றபுகழ்
நங்கையருள் கோட்டை நாச்சி
சாமளத் தனிவடிவி னுள்கயற் கண்ணியருள்
தாங்குதெரு ளோங்கு புகழாள்
சங்கர னுடன்புரி நடந்தனி லடர்ந்தமயில்
தனிமருவு கருணை நாட்டந்
தாமளித் தருள்கையாற் கற்பக விநயகன்
தனிமுதல் சிறந்த வருளாற்
றரமுற்ற நகரெனச் சார்ந்தருள்செய் வார்ந்தவர்
சந்ததம் புகழ்செய் நலமாம்
கோமளப் பொழில்சுலவு கோட்டையூர் தன்னில்வளர்
குவலயத் தனுவ வெனையாள்
கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (3)

மண்டலம தனினன்று கொண்டநக ரிதுவென்று
வண்புகழ்செய் பெரியர் போற்ற
வளமருவு நகரினிடை மகுடதன வசியர்தம
வரமருவு செல்வ மோங்கிக்
கொண்டலைப் பணிகொண்ட கொடைமருவு காமுடைய
கொள்கைவார் புரியறத்தாற்
கோமருவு மறையவர்கள் மாமுனிவர் நிறையறமெய்
கூறவரு சீரதாகும்

கண்டலைத் திடுமொழியர் வண்டலைத் திடுவிழியர்
கண்டறப் புரிநலமதாற்

கமலா சனச்செல்வி நலமேவு கோட்டையூர்
காசினியின் மேன்மை யுளதாம்

குண்டலப் புலவரொடு மெண்டிசைத் தலைவர்பணி
கொண்ட வற்புத வென்னையாள்

கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (4)

பங்கேரு கத்தணிகொள் செங்கேழ் பொருத்தமுறு
பண்பார் சிறப்பினளிதாம்

பாவுபொன் னற்பொடியை விரவுசின் னத்தொளிசெய்
பாங்கா மிதழ்க்கு நடுவே

சங்கேறி மணிபொழிய அங்கேறு குருகெழில்செய்
தன்னுகும் சினையி தெனவே

சந்தத மகிழ்ந்ததனி லடைகாத்தல் தடைகாட்டும்
சஞ்சரிக மதுவருந்தல்

கங்கேறு திரைமருவு புண்யதீர்த் தந்தனிற்
கடவுளரு மாடி வந்து

கண்டுனது சரணமலர் பணியவருள் பொழியவரு
கர்த்தனே சித்தர் போற்றுங்

கொங்கேறு பொழில்சுலவு கோட்டையூர் தன்னில்வளர்
குருநாத வென்னை யாள்வாய்

கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (5)

சாமளத் திருவடிவன் மாமலர்க் கணைமதன
சாமியைத் தருதிருவினுன்

சங்களவு செங்கைவளர் செங்கமல மங்கையருள்
தாங்குமகி ழோங்கு புகழான்

2

பூமகட் கொருதலைவ னுமரிக் கொருகலைகொள்
பூதரப் பகைவன் மனையாம்
புலோமசை தனைக்காத்த பொற்ப விற்பனர்மிகப்
போற்றவரு தெய்வ நிதியே
மாமழைத் திருவடிவ சன்னுசி முதலான
வரமருவு மமரர் புகழ்சேர்
வந்தனம் புரியவவர் மனமகிழ்செய் வரமருள்செய்
வள்ளலே யுள்ள மகிழ்வாய்
கோமளக் கயல்குலவு மாமலர்ப் பணைசுலவு
கோட்டையூர் வாத வனையாள்
கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்பமணியே (6)

மஞ்சுளத் தணிமருவு கிஞ்சுகத் தணிமொழியர்
வண்டளக் கமல விழியார்
மதிதரு முகத்தினர் துதிதரு நகத்தினும்
வளர்தன மிகுத்த திறலார்
எஞ்சிவரு கொடியனைய மிஞ்சுதலி னடுவுடையர்
ஏற்றறம் புரிவரைபுரை
எழில்வளர்செய் மணிமாட வரிசைதரு திருவீதி
எந்நாளு மன்விழாவாம்
மஞ்சிவர்செய் காமுடையர் செஞ்சொலினர் தாமுடையர்
மருவுபுக ழாக ரத்தார்
வரமருவு மாதனச் சேக்கையார் புரிதரும
வளமேவ வளர்செய் நிதியே
கொஞ்சமதி கொண்டவெனை யஞ்சலென வந்தருள்செய்
கோட்டையூர் நாட்டு தலைவ
கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (7)

செங்கமல மங்கைமலை மங்கைகலை மங்கையர்கள்
சிந்தைவளர் சந்த மதனுற்
செல்வநிறை நல்லறம் கல்விநிறை நல்வளம்
சேதனர்க ளோதும் அறவோர்
பொங்குமகிழ் தரவளர்செய் மங்களம துரசுரைகொள்
பொற்பணிசெய கற்ப தருவே
பொலன்மருவ வளர்வதென நலமருவு பொழில்சுலவு
பொன்மதுரை தானி கொண்டு
துங்கமதி முடிகொண்டு மங்களம தணிகொண்ட
துரியநிலை யுரியர் போற்றும்
சுந்தரனை வந்தருள்செய் சிந்தைமகிழ் வல்லனுச்
சோதிமுடி சூட்டி யருள்செய்
குங்கும பயோதரிபொன் மங்கைகய லாட்சியருள்
கோட்டையூர் வாத வெனையாள்
கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (8)

வாட்டந் தவிர்த்திலக நாட்டஞ் சகத்திரன்
மனைவி யயிராணி கற்பாம்
வலமருவு புகழ்நிலவ மாசூர் வலத்தங்கை
வலதுகர மதனை வாங்கும்
நாட்டந் தரும்பெரிய வாகாளு மாகாளன்
நட்புடைய நாத னீயே
நந்தணிகை யந்தணன் செந்திரு மகிழ்ந்தபுய
நாயகன் கலையு நீயே
கோட்டந் தரும் பெரிய குவலயத் தொளிமருவு
கோமளா காவடிவனே
கொம்மைதா னாட்சிசெயெ னம்மைமீ னாட்சிவளர்
கோட்டையூர்க் கொருநிதியமே

கூட்டந் தரும்பெரியர் நாட்டந் தருந்துரியர்
கொண்டாடு திருவ வெனையாள்
கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (9)

மட்டுலவு பொற்புமலர் வைத்ததரு மெத்துநிழல்
வாழமரர் சூழ வந்துன்
மனமருவு சரணமலர் பணியுமவர் மனமகிழ்செய்
வரமருள்செய் கருணை நிதியே
கட்டழக னிட்டமலி மட்டலர்கள் கொட்டுபொழில்
காலைமலை சோலை மலைவாழ்
கஞ்சலோ சனனுமீ மஞ்சுலாஞ் சிகரமணி
கனகமலி சிகரி புனையும்
இட்டமணி திருவரங் கத்தளியின் மெத்தளிசெய்
யெங்கள்குல தெய்வம் நீயே
எப்பொழிலு நிற்பவருள் வைப்பினி லளித்தருள்செய்
ஏகாந்த வள்ள னீயே
கொட்டமிடு மசுரர்வலி நட்டமிட வடுபரம
கோட்டையூர்த் தலைவ வெனையாள்
கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (10)

குவலயத் தொளிகுலவு சனுவுடைத் தலைவநின
குணமுடைக் கருணை யதனல்
குண்டலக் கடவுளர்கள் யெண்டிசைப் புலவரொடு
கோலமலி பாதலத்திற்
தவலரிய வகியரசர் முதலவர்கள் பணியவருள்
தருவாத கருணை யுருவே
சந்ததமு முந்தனருள் சிந்தைதரு தனவைசியர்
தலைமைதரு புனிதர் புரியும்

நவமுளவு தருமமலி நலமருவு நிலைமைபெறு
நாகரிக மாக நிலவும்

நகரமாங் கோட்டையூர் நாயகபொ னந்தணிநை
நாதனே சோதி வடிவ

குவலயத் தணிமருவு தவநிலைப் பெரியர்புகழ்
குருவாத் திருவ வெணையாள்

கொற்றந் தரும்புலவர் நித்தந் தரும்பணிகொள்
கொத்தங் கருப்ப மணியே (11)



௨

சிவமயம்.

கொத்தங் கருப்பணசாமி
நவரெத்நமாலை

சீர்பூத்த வுலகமங்கை நிலவு தாங்கும்
திருமுகம்போற் செல்வவளஞ் செழித்து நல்கும்
கார்பூத்த நலஞ்சிறந்து கருது மேன்மை
கன்னலணி செந்நெல்விளை கழனி சூழ்ந்து
வார்பூத்த தடஞ்செழித்து மலர்த்தேன் பொங்கும்
வளமருவு சோலையுடை மருவுந் தேசின்
ஏர்பூத்த கோட்டையூ ரேற்றுந் தேவன்
எங்கள்கொற்றக் கருப்பணன்ற னிசைத்து வாழ்வாம் (1)

வண்டானங் களையெடுக்குங் கடைச்சி மாதர்
வார்விழியை நேர்கயலா மதித்தஞ் ளித்தான்
கொண்டான் நாணமுடன் கோவி னேறக்
குறித்தபணை வளஞ்சூழ்ந்த கோட்டை யூர்க்கண்
பண்டான சுரர்முனிவர் பணிந்து போற்றப்
பரந்தாம னங்கிசத்தின் பாங்கா மேலோன்
கண்டான மொழிப்பெரியோர் கனமாப் போற்றுங்
கடவுள்கொற்றக் கருப்பணன்றாள் கருத்திற் சேர்ப்பாம் (2)

மன்னவர்க்குப் பின்னவரா மருவுஞ் சீலர்
மகுடதன வைசியர்குலம் வாழ்வினோங்க
அன்னவர்க்க மலர்த்தடத்தி னழகைச் செய்யும்
அளவளவா வளமுளவா யறத்தா ரோங்கும்
சொன்னவர்க்க மணிசெழிக்குஞ் சுருதி மேலோன்
சுந்தர நாதன்றளியார் கோட்டை யூர்க்கண்
கன்னலொத்த வாரிபுனை தடத்தின் பாங்காம்
கடவுள்கொற்றக் கருப்பணடி கருத்திற் சேர்ப்பாம் (3)

செல்வமல்கும் கல்விவளஞ் செழித்து மேவித்
திருமகட்கோர் சதனமெனத் தேவர் போற்ற
எல்வணங்குந் திருத்தாள்கொ ளேக ளுகி
எங்களன்னை கயற்கண்ணுட் கிதத்தை நல்கும்
செல்வணங்குங் கோடீரான் சுந்தரேசன்
திருத்தளிசேர் கோட்டையூர் செழிக்கத் தோன்றுங்
கல்வணங்கும் புயத்தணியார் கடவுள் கொற்றக்
கருப்பணன்ருள் விருப்பமுடன் கருத்திற் சேர்ப்பாம் (4)

செங்காவி செங்கமலஞ் தேசாம் பற்றுன்
செழித்துவளர் பானீயம் சிறந்த தாகும்
கொங்காருந் தடந்தரத்தின் மேல்பாற் றேன்றுங்
கோயில்தனில் வீற்றிருக்குங் கோமான் சீமான்
சிங்காரந் தருங்கோட்டை நகர்வாழ் தேவன்
திருவளர் கொத்தங்கருப்பர் திருத்தாள் போற்றின்
எங்காகுஞ் சஞ்சிதத்தி னேற்ற மெல்லாம்
என்முனந்த காரமென விசைத்தற் பாற்றே (5)

மருவளரு மலர்வளரு மலர்த்தேன் வார
வண்டலைக்குந் தண்டலைபொன் வளர்த்தாற் சூழ்ந்து
திருவளரும் பெருவளத்தாற் சிறந்த செல்வச்
செழிப்புடைய திருவாறஞ் சீர்கொண் டோங்கக்
குருவளரு மைந்தருச்சூ ழுவணைக் கோமான்
கொண்டல் வாகனன்போற்றக் கோட்டை யூர்க்கண்
தருவளருந் தடங்கரைசூழ் தடத்தின் பாங்காம்
சாமிகொற்றக் கருப்பர்பதந் தலைமேற் கொள்வாம் (6)

கொக்தளிக்குஞ் சிந்தெனத்தண் வாரி கொண்டு
கோகனதன் முதலமரர் குலவும் வாவி
தந்தளிக்கும் நடுவுடையா ராடக் கோவைச்
சஞ்சரிகங் குவளையெனத் தயங்கிச் சூழும்

வந்தளிக்கு மலர்ப்பொழில்வார் வளங்கொண் டென்றும்
வளந்தருபொற் கோட்டையூர் மகிமை யோங்க
நந்தளிக்குஞ் சிந்துகொற்றக் கருப்பனெங்கள்
நாதனருட் சரணமனம் நாட்டுவோமே (7)

அந்தரத்தின் விந்தைசெறி விமானம் போற்றும்
அரியசுரர்க் கஞ்சியா னடுக்கற் கேகச்
சுந்தரத்தின் விசையமலி சசியைக் காக்கச்
சுதத்திரனு முனைத்துதிக்கத் துயர்தீர்த் தாண்ட
சுந்தரத்தின் வடிவுடைமா காள நீயே
கவினுலவு கோட்டையூர் காக்குந் தேவ
நந்தாற்றுந் தடங்கரைக்கண் டளிவா ழெங்கள்
நாதகொற்றக் கருப்பவென்மேல் நாட்டம் வைப்பாய் (8)

ஆடகத்தா மாடநிறை யளவின் றோங்கும்
அற்புதப்பொற் பணிவீதி யழகு செய்யும்
மாடகத்தாம் வீணைபுனை மடவா ராடும்
மன்னரங்கத் தின்னரங்கன் மதிக்குஞ் சீர்சால்
ஏடகத்தாம் மலர்ப்பொழில்சூழ் கோட்டை யூர்வாழ்
எங்கள்கொற்றக் கருப்பணன்பொன் னேற்றுந் தாளே
நாடகத்தா ரென்னுளும் செல்வங் கல்வி
நாட்டுபுகழ்ச் சந்தான நலத்தார் வாழி (9)

சிவமயம்

கீழச்சிவப்பட்டி ஸ்ரீமான் பாடுவார் முத்தப்ப செட்டியாரவர்கள் கொத்தங்கருப்பண சாமிபேரில் இயற்றியவை

கடல்தனக் கோரணை முடித்ததன் மீதிலங்
காபுரிக் கேகி யெங்குங்
கண்டிடா வடிவினுயர் வண்டோ தரிக்கினிய
கணவனும் ராவணனையே
அடல்சமரில் வென்றிலங் காபுரியை வீடணற்
கரசாள மகுட மீந்து
அன்போர கத்திருவைச் சிறைமீட்டி வைத்தபின்
ஆயர் பாடியி னேயமாம்
இடையர்குடி மேற்சினக் தளவிலாக் கன்மாரி
இந்திரன் பொழிய விடவே
இதுபார மழையென்று கன்மாரி காப்பதற்
கினிய கோவர்த் தனகிரிக்
குடைபிடித் தொருபுரத் தினில்வந்து காத்தருள்செய்
கோட்டூர் தனக்கதிபனே
குற்றந்தவிர்த் தடியார்கண் மீது மெத்தன்பு வைத்த
தயாபரா கொத்தங் கருப்பண சாமியே (1)

சலநிதிக் குள்ளான சேற்றினில் முளைத்தவெண்
டாமரைப் பூவரம்பின்
தக்கதோ ரிஞ்சியிற் சாடவப் பேரிஞ்சி
தனிமஞ்ச ளைத்தழுவவே
இலையாக வளர்மஞ்சள் செஞ்சாலி யைத்தீண்ட
இயல்பான செக்நெல் மன்னும்
இனியசெங் கன்னலிடை சாயக் கரும்புகல்
லெலுமிச்சை தனைநெருங்க

நலமுயரு மெலுமிச்சை மாவினிற் சாரவே
நல்கு பூகத்தி னெட்ட
நன்மைசெறி பூகமுயர் தெங்கினிற் சாடவே
நலதேங்கு மதுமீவிலே
குலவிவளர் நதிகளும் பாயுநா டாகிவளர்
கோட்டூர் தனக்கதிபனே
குற்றந்தவிர்த் தடியார்கள்மீது மெத்தன்பு வைத்த தயாபரா
கொத்தங் கருப்பண சாமியே (2)

தேடரிய பிரமப் பிரதிட்டை விக்னேசுரர்
சிவப்பிரதிட் டைகள் தடாகம்
தீர்த்தப் பிரதிட்டைமட வாலயஞ் சத்திரம்
திருவாச நீர்ப்பந்தலும்
வீடுதொறும் யாகசாலை மகேசுரபூசை
விரதங்க ளோம குண்டம்
வேண்டு மாராதனைகள் நித்யசிவ வர்ச்சனைகள்
விட்டுணு பத்தி வணக்கம்
நீடுசெய் யாகம புராண காவியங் கேள்வி
நீதி வழுவாத மார்க்கம்
நித்யசுப சோபனம் நாலுவரு ணச்சிரம
நிறைந்திருக் கின்ற மாடம்
கூட கோபுர மொடு துலங்குநக ரெங்நாளும்
கோட்டூர் தனக்கதிபனே
குற்றந் தவிழ்த்தடியார்கண் மீது மெத்தன்பு வைத்த தயாபரா
கொத்தங் கருப்பண சாமியே (3)

கார்கொண்ட கொண்டையும் கொண்டையி லணிந்திலகு
கந்த மலருங் குச்சிலுங்
காங்குரிய கெண்டையுரு மாலும் நுதலினிற்
கஸகூரியும் குழைதனிற்
சீர்கொண்ட வயிரக்கடுக்கனும் மேன்முருகு
சிறந்தமலர் வீழியிதழும்

செய்ய கேயூரமார் புயங்களுங் கணையாழி
சேர்ந்த விரலுற்ற கரமும்
மார்கொண்ட செம்பொற் பதைக்கமும் சரப்பளி
மருங்கினிற் பச்சை வடமும்
வனசமல ரிணையொத்த நின்னடிப் பெருமைதனை
வாழ்த்தும் அடியார் தனக்குக்
கூர்கொண்ட விழிகொண்டு தரிசிக்க வந்தருள்செய்
கோட்டூர் தனக்கதிபனே
குற்றந்தவிர்த் தடியார்கண்மீது மெத்தன்புவைத்த தயாபரா
கொத்தங் கருப்பண சாமியே (4)

அஞ்சுதலை யீசனுக் கல்லாது வேறில்லை
அவர்பிள்ளை யாறு தலையாம்
அம்புவியி லடியவர்க் கஞ்சுதலை தீர்த்தவர்க்
காறுதலை யீய வேண்டி
மஞ்சுபடி பொன்னிலங் காபுரி தனிற்சென்று
வந்தாக் கர்கண் மன்னனை
வன்சமரின் வென்றுவரு செந்திருப் பெண்ணுனது
மாதாவு மாகை யாலே
தஞ்சமென் றோர்க்குக் குபேர பாக்கியமுமென்
சாமிகண் பார்க்கின் வருமே
சஞ்சலமு மகலுமே நம்புமடி யாருனது
தாள்கண்டு தரிசிக்கவே
கொஞ்சுபரி மீதில்வரு ரஞ்சித குணகரா
கோட்டூர் தனக்கதிபனே
குற்றந்தவிர்த் தடியார்கண்மீது மெத்தன்பு வைத்த தயாபரா
கொத்தங் கருப்பண சாமியே (5)

நவமணிகள் தங்கு கங்காநதிக் கிணையோடை
நாடுமரி தீர்த்த மகிமை
நாமாது பூமாது வரைமாது முதன்மற்றை
யாவரும் நாட்டி லுளரும்
தவமணியு முனிவரும் சிவனருளி லினியரும்
சதுர்மறைகளும் ஆயிரம்

தலையுட னிரட்டித்த நாவுடைய சக்கிரியும்
சாற்றுதற் கெளிதாகுமோ
பலவினைச் சூதுகள் பஞ்சமா பாதகம்
பகர்கன்மம் குட்ட ரோகம்
பதைத்திடும் பாவங்கள் கண்டவுட னேகுமே
பரிதியைக்கண்ட பனிபோல்
குவலயந் தன்னில்வளர் பாவங்கள் தீர்த்தருள்செய்
கோட்டூர் தனக்கதிபனே
குற்றந்தவிர்த் தடியார் கண்மீது மெத்தன்பு வைத்த
தயாபரா கொத்தங் கருப்பண சாமியே (6)

அகிலமது கிடுகிடென நடையிலுயர் புரவிமிசை
அங்கவடி தனைமிதித்து
ஆங்கார மாகவோர் கையினிற் கடிவாளம்
அரிவாள் கையிற் பிடித்து
முகில்வண மணேந்தநொரு மெய்யிலணி பூத்தாலும்
முழங்க வாரங்கள் துண்டு
முருகுகுழை காதின்முத் துச்சுட்டி நெத்தியில்
முறுக்கு வீசைகள் துடிக்க
சிகியிறகு கொண்டையிற் சொருகிக் கருப்புடை
சேரவே கச்சை கட்டிச்
செகத்தினிற் பவனிவர வண்டப் பிசாசுகள்
திடுக்கிட் டடங்கியோட
குகரமுறு பரிகளொடு கொண்டாடி வருபெரிய
கோட்டூர் தனக்கதிபனே
குற்றந்தவிழ்த் தடியார்கண்மீது மெத்தன்புவைத்த
தயாபரா கொத்தங் கருப்பணசாமியே (7)

உ

சிவமயம்.

கருப்பண்ண சுவாமி பேரில் பாடிய சிந்து

பச்சைமாமலையில் வாழும் பரம்பொருளழகர் வாசல்
பக்ஷமாவாழுமெங்கள் பதினெட்டாம் படியான் மீதில்
இச்சையாம் சிந்துசொற்றேன் என்னுளத்தியைந்தவண்ணம்
விச்சையாய்ப் படிப்போர் கேட்போர் மேன்மையாய் வாழ்வார்
[தாமே.

நெத்தியிற்றிலதமிட்டு சுத்தியேக வேட்டிகட்டி
நேர்மை கொண்டுலாவிவந்த தாரையா
யெங்கள்—நீலமேகனுங்கருப்பர் சீரையா (1)

அப்பன் அழகர் வாசல் அதிகாரியாகுமுங்கள்
அய்யன் மெய்யன் நீலமேகம் தானையா
மிக்க—அன்புடைய பொன்கருப்பன் நானையா (2)

சந்தனம் புனுகணிந்து கெந்தபொடி மேலணிந்து
சாமியென வந்ததுரையாரையா
யெங்கள்—சஞ்சலம் தீர்த்தாளவந்த சீரையா (3)

அந்தமுள்ள மாலழகர் அய்யன் மணிவாசல்தனில்
அதிகாரம் செய்யும்துரை யாரையா
யெங்கள்—அஞ்சன வண்ணத்தமலன் பாரையா (4)

வெத்தி நற்குடைபிடிக்க நத்துபொற் குதிரை மீதில்
வேடிக்கையாய்ப் பாடிவந்த தாரையா
எங்கள்—மேன்மைக் கருப்பண வேள் நீரையா (5)

சுத்தனும் அழகர் வாசல் நித்தமும் கெடிசெலுத்தும்
சுந்தரஞ் சேர்பாகு கொண்ட சோதியே
அடியர்—துதிக்கமகிழ்ந்தருள் செய் நீதியே (6)

கனகமணிப் பணியணிந்து காங்குருமால் சோங்குகட்டி
காம்பீரமாய் வந்ததுரை யாரையா
யெங்கள்—கங்காளனுன துங்கன் நீரையா (7)

மங்கள சிங்காரனெங்கள் மாலழகர் வாசல் கொண்ட
மன்னவனும் நீலமேகம் காரையா
மிக்க—வள்ளலெனவுள்ள மகிழ் சீரையா (8)

மல்லிகை மென்முல்லையிரு வாட்சி நன்மருக்கொழுந்து
வாசங்கமழ் மாலையணி வானவன்
யெங்கள் வள்ளலாம் கருப்பணவேள் தானவன் (9)

பில்லிக்கு முண்டன் வருபேய்களுக்குந்தான் சூடோரி
பெருமான் கருணைபொழி மேலவன்
நல்ல—பேர்மருவும் நீலமேகந் தானவன் (10)

சல்லடம் பொற் காலிலிட்டுச் சரிகையங்கிதான் தரித்துத்
தங்கப்பணி மேலணிந்த வீரையா
யெங்கள்—சாமி கையில் நேமிகொண்ட காரையா (11)

அல்லல் வினைதானகற்றும் அழகர் சன்னிதிக்கு முன்னர்
அதிகாரஞ் செய்யு நீலமேகமே
யெங்கள்—அண்ணலே யெண்ணும் விண்ணோர்கள் யோகமே (12)

கருங்கச்சை தானிறுக்கி காலினிற் சிலம்பணிந்து
கலகல வென்றாடி வந்ததாரையா
யெங்கள்—கண்ணனே கருப்பண கண்பாரையா (13)

கர்த்தனும் அழகர்வாசல் நித்தனும் பிரதானியென்னும்
கரியநீலவண்ண னென்றதாரையா
யெங்கள்—கண்ணன் மகிழண்ணல் துரைதானையா (14)

காலில் வீரதண்டை நேரும் கோலவெண்பரியினேறும்
கார்மருவு மேகவண்ண மேலவா
எங்கள்—கர்த்தனென்றும் வெத்திதரு சீலவா (15)

முறுக்கிவிட்ட மீசையுடனிறுக்கியிட்ட கச்சை கட்டி
மூதண்டங்கள் கோலிவரும் வீரையா
யெங்கள்—முன்னவனே பொன் கருணை பாரையா (16)

கோதண்டபாணி யெங்கள் மூதண்ட மாலழகர்
கோமான் கருணைகொண்ட வள்ளலே
உன்ந்த கோமளச் சீர்மால் பதத்தையுள்ளலே (17)

நீலப்பரிமேலினேறி கோலமாப்படி நடந்து
நீதமுடன் வந்தருள்வதாரையா
யெங்கள்—நேயப்படியேயருள் செய்வீரையா (18)

அய்யன் அழகேசர் வாசல் அதிகாரம் செய்யும் வீரன்
அஞ்சன வண்ணத்த னெங்கள் தீரனே
நன்மை—அருள்பதினெட்டாம்படி வீரனே (19)

கட்டிய பாவாடைபோட்டு கைதனில் வலையமிட்டுக்
கடுகி நடந்துவரும் கர்த்தனே—பெரும்
கருணை பொழிந்து வரும் சித்தனே (20)

மட்டடங் காதனபேயைக் கட்டியே தண்டம் புரியும்
வள்ளலெனுந்தள்ளரிய பாதவா—அண்ணல்
வாசல்ப்பிரதானியெனும் போதவா (21)

கடுக்கன் நிலவுதொங்க அடுக்கு முருகணிந்து
கண்டசரம் கொண்டணிந்த தாரையா
யெங்கள்—கர்த்தனும் கருப்பணவேள் தானையா (22)

அடுக்கும் அனகர்வாசல் தொடுக்கு மலைப்படிபோல்
ஆனபதினெட்டாம் படிதானையா—யெங்கள்
ஐயனும் கருப்பனருள் வானையா (23)

வெள்ளிக் கயறுகொண்டு வெங்கலப் பாற்குடமெடுத்து
வேடிக்கையாய்ப் பாடிவந்ததாரையா
யெங்கள்—வீரனுங் கருப்பணவேள் நீரையா (24)

பழனியரை தன்னில் வாழும் பச்சைமாலழகர் வாசல்
பதினெட்டாம் படிக்கருப்பர் நீரையா
நிதம்—பண்ணவர்கள் போற்றவரும் சீரையா (25)

இச்சையாய்ப்படிப்போர்க்கெல்லா மின்பமாய் வரங்கொடுக்கும்
ஏற்றமுடன் வந்ததுரையாரையா
அன்பர்—ஏற்றும் பரம்பொருளும் நீரையா (26)

பச்சைமாமலையழகர் இச்சையாய்க் கெடிசெலுத்தும்
பதினெட்டாம் படிக்கருப்பவேளையா
நல்ல—பத்தர்கட் கருள்புரியுங் காளையாம் (27)

மங்களக் கவிதைபாடி யிங்கிதமாய்ச் சேதிசொல்லி
மருவவருபெருமன் யாரையா—மிக்க
வங்கணக்கருப்பணவேள் பாரையா (28)

திங்கட்குடை பொங்கழகர் தீரன் வாசல் நேர்ப்ரதானி
செய்யபுகழ் நீலமேகம் நீரையா
யெங்கள்—சிந்தைப்படிவந்தருள்வ தாரையா (29)

அத்தன் பொன்னடியவர்க்கு மெத்தவரந் தந்தருள்செய்
ஆயன்மலைக்கருப்பன் தானையா
யெங்கள்—அண்ணல் கருணை பொழிவானையா (30)

அத்தகடையம் புனைந்து நெத்தியில் நாமம் வனைந்து
அலங்காரமாகிவரும் கர்த்தனே
எங்கள்—அய்யா கருப்பணவேள் நித்தனே (31)

வித்தகன் சப்பரத்தடி முத்தயன் கார்மேகவண்ணன்
மேனிக் கருப்பண்ணனிவர் தானையா
நல்ல—வித்தகர் போற்றும் வரதன் தானையா (32)

அங்கிநிலயம் தொடுத்து வங்கிசமுதாடுகட்டி
அடியரைக் காக்கவந்ததாரையா
யெங்கள்—அண்ணல் வண்ணக்கருப்பணனீரையா (33)

சங்கிதத்துடனே பொங்கல் இங்கிதத்துடனே வாங்கும்
தாட்டிக முத்தையனிவர் தானையா
மிக்க—சங்கத்தவர் பொங்குபணி வேனையா (34)

வச்சிரப் பதக்கமுருமாலை யசையவேகட்டி
மங்களமாயிங்கு வந்ததாரையா
எங்கள்—மன்னன் பதினெட்டாம் படியாரையா (35)

உச்சிதமருவும் பதினெட்டாம்படி தன்னில்மேவும்
உறங்காப்புளிக் கருப்பவேளையா—எங்கள்
உத்தமன் பொன்வெத்தி தருவானையா (36)

மோகனநன் மாலைமுத்துத் தாவடம் சிறந்தணிந்து
மோடியுட னுடிவந்ததாரையா—எங்கள்
முன்னவனும் பொன்கருப்பன் சீரையா (37)

நாகரீகமான வரமோகனத்தினால் மயக்கும்
நாட்டியக் கருப்பணிவர் தானையா—எங்கும்
நன்மைதர வந்தமன்னன் தானையா (38

காலினிற் சிலம்பணிந்து மேலினற்பணிபுனைந்து
கார்மேகம்போல் வருவதாரையா—எங்கள்
கர்த்தனுத்தமன் கருப்பவேளையா (39)

ஆலிலையிற் பள்ளிகொண்ட மால்வரப்ரதானியென்ற
ஆண்டவன் துரைக்கருப்பனுரையா
யென்னை—ஆண்டுவந்து சீர்களிக்கும் பேரையா (40)

சந்தனம் கஸ்தூரியிட்டு சாந்தணிந்து நேர்ந்தவர
சங்கீதம் பாடிவந்ததாரையா—யெங்கள்
சாமிபொன் கருப்பணவேள் தானையா (41)

வந்தனஞ் செய் மலடிக்கு சந்தானங் கொடுத்தருளும்
வள்ளல் நீலமேக தெய்வந் தானையா
மிக்க—வானவரைக் காக்கு மெய்யன் தானையா (42)

மல்லிகைச் சரமணிந்து உல்லாசமாய்ப் பொட்டணிந்து
வாசமணிந் தாளவரும் நேசனே
எங்கள்—வள்ளலெனக் கொள்ளவரும் தேசனே (43)

தொல்லுலகெலாம் புகழும் தள்ளாகுள மீதில்வாழும்
தூயனே மூத்தைய வெங்கள் நேயனே
நல்ல—சோதி மாகாளப் பெரியமாயனே (44)

ஒண்டிமுத்து மேல்முருகு வண்டிக் கடுக்கனிட்டு
ஓங்கும் புகழ்தாங்கி வந்ததாரையா
யெங்கள்—உத்துங்கன் முத்துக்கருப்பன் தானையா (45)

சண்டியாம் பிசாசுகளை முண்டமாய்ப் பிரண்டுருளச்
சாட்டையா லடிக்கும் துரைசாமிதான்
இவர்—சச்சிதானந்தப் பொருளாம் நேமிதான் (46)

காதினிற் கடுக்கனிட்டு மீதினிற் சவ்வாதணிந்து
கையருவாள் கொண்டு வந்ததாரையா
எங்கள்—கர்த்தன் வெத்திநேர் கருப்பன் பாரையா (47)

நீதியுடனே வழக்கை நெய்யுடன் வலுவாய்த் தீர்க்கும்
நேயன் கருப்பண வேள் தானையா—யிவர்
நித்தமும் கருணை தருவாரையா (48)

பஞ்சாக் கரமணிந்து பச்சிலைக் கடையமிட்டு
பாத குறடேறி வந்ததாரையா—யெங்கள்
பண்ணவன் கருப்பணவேள் நேரையா (49)

வஞ்சனை பில்லிசூனியம் மந்திரங்கள் செய்தவரை
மாறிடச் செய்தாளும் ஞானமூர்த்திதான்
மிக்க—வள்ளல் வானவர்க்கருளும் சீர்த்தியான் (50)

பஞ்சவர்ண மிஞ்சிவரும் பதினெட்டா மேளதாளம்
பாடிவார் காடிவரும் பார்த்திபா—மிக்க
பாவனைக் காத்தருளும் சீர்த்தியாய் (51)

சந்திரகாவிச் சரிகைதாங்கிய மேறகட்டி நல்ல
சாதாரண வணிந்துவரும் சாமியே—எங்கள்
சர்ப்பசயனன் புகழும் நேமியே (52)

துதிக்கும் திருநீறுடனே தூயசிந்தூரப் பொட்டிட்டு
சுந்தரமா வந்ததுரை யாரையா—எங்கள்
தூயவன் கருப்பணவேள் பேரையா (53)

கதிக்கும் வளம்சிறந்து காட்டுபதினெட்டாம் படிக்
கருப்பண சாமியிவர் தானையா
யெங்கள்—கண்ணபிரான் யெண்ணுமன்பன் தானையா (54)

முத்தணி பதைக்கமார்பில் மோகனப்பொன் மாலையுடன்
முன்னணியாய் மின்னவந்த தாரையா
யெங்கள்—முத்தனும் கருப்பவள்ளல் தானையா (55)

கர்த்தன் அழகர்மனது மெத்தமகிழ்வாக வரும்
கருப்பண சாமியிவர் தானையா—யெங்கள்
காதலைத் தீர்த்தாள வருவாரையா (56)

சாதிமல்லின் வல்லவாட்டுக் தாங்குமெழிற் சல்லடமும்
சாந்தணிந்து நேர்ந்துவந்த தாரையா
யெங்கள்—சாமியா முத்துக்கருப்ப னேரையா (57)

காதலுடன் ஓதுபெண்கள் மேதக நினைந்துவரும்
கருப்பண சாமியிவர் தானையா
நல்ல—கந்தரத்தின் மேனிகொண்ட கோனையா (58)

மாசிலாக் குதிரையின்மேல் வீசியகை வாளுடனே
வந்தருள் செய்தெந்தனைக் கண்பாரையா
எந்தன்—வந்தனத்தை ஏற்றருள் செய்வீரையா (59)

காசினியெங்கும் புகழ்ந்து பேசமகிழ்ந்தோங்கி வரும்
காரண பெருமைகொண்ட கர்த்தனே
பெரிய—கருப்பண சாமியருள் நித்தனே (60)

ஓங்குகை வாளாங்குகட்டி ஓய்யாரமாய் வையமதில்
உத்தமர்கள் போற்றவந்த தாரையா
மேலோர்—ஓதிகொண்டு காணுமெய்யன் சீரையா (61)

முத்தணி பதக்கமிட்டு மோகனப்பொன் மாலைதொட்டு
மோடியுடன் வந்ததுரை யாரையா
யெங்கள்—முத்துக்கருப்பண வேள் தானையா (62)

கர்த்தனிடம் நத்திவந்து காணுமழகர் மகிழ்செய்
கருப்பண சாமியிவர் தானையா—என்னைக்
காத்தருள்செய் மூர்த்தியிவர் தானையா (63)

சோதி வாசவல்லவாட்டுந் துங்கமணிச் சல்லடமும்
தொட்டணிந்து கிட்டிவந்த தாரையா
எங்கள்—சுந்தரக் கருப்பணவேள் சீரையா (64)

காதலுடன் தெய்வப்பெண்கள் கண்டுபின்றொடரு மெங்கள்
கருப்பண சாமியிவர் தானையா—மிக்க
கந்தரத்தின் சுந்தரத்தார் தானையா (65)

வாசியாம் குதிரையின்மேல் தேசினுட னேறிவரு
மங்களகல்யாண துரையா ரையா
யெங்கள்—மன்னனெனும் பொன்கருப்பன் தானையா (66)

காசினியெங்கும் புகழும் நேசன்பெரிய கருப்பன்
கர்த்தனெனக் கண்டுதொழு வீரையா—எங்கள்
கண்ணன் தலைவாசல் காக்கும் சீரையா (67)

ஓங்குகையின் வாங்கும்வாளைத் தாங்குமிடைப் பாங்குகட்டி
ஒய்யாரமா வந்ததுரை யாரையா—சொல்லும்
உத்துங்கன் முத்துக்கருப்பன் தானையா (68)

காங்கினிலு மோங்குசெய்ய காந்திகொண்ட சோதிமெய்யன்
கருப்பண சாமியிவர் தானையா
எங்கள்—கர்த்தனிவன் வெத்தி தருவானையா (69)

வாரணிகொங்கை மடவார்சீரணி நடனஞ் செய்ய
வண்மையுடன் வந்ததுரை யாரையா—எங்கள்
வள்ளலாங் கருப்பணவேள் நீரையா (70)

காரின்வடிவான யெங்கள் சீரணி முத்துக்கருப்பன்
கார்மேகம்போல் வருவதாரையா—நல்ல
கங்காள னெங்கள் துரைதானையா (71)

காலினிற் சிலம்பணிந்து கையில்வல்லயம் பிடித்துக்
கலகலென ஆடிவந்த தாரையா—எங்கள்
கண்ணனெனும் பொன்கருப்பன் தானையா (72)

கோலஞ் சிறந்தமணிக் கோபுரத்தின் முன்னிலையில்
கூடும் பதினெட்டாம்படிக் கொண்டல்தான்
புகழ்கூறுமழகேசர் துதிகொண்ட வேள் (73)

மட்டுள்ளகெந்தப்பொடி சவ்வாது மிகவே மணக்க
வந்ததுரை விந்தையென்ன கூரையா—யெங்கும்
வாதபித்தம் தந்தநிந்தை தீரையா (74)

கட்டழகன் பட்டமணிந்திட்ட குதிரைமேல் வரும்
காரணன் கருப்பண வேள்தானையா—எங்கள்
கண்ணனெண்ணும் விண்ணவர்கோன் தானையா (75)

விருதுபலவும் பிடிக்க விந்தைசெறி வாத்யமுடன்
வேடிக்கையாய் நாடிவந்த தாரையா
எங்கள்—வித்தகன் கருப்பணவேள் தானையா (76)

பஞ்சவர்னடால்வரிசை விஞ்சையர் முன்னே நடக்க
பவனியுடன் வந்ததுரை யாரையா
என்மேல்—பண்புகொண்ட பொன்கருப்ப வேளையா (77)

கஞ்சமலர்ப் பாதமதில் வீரவெண்டயம் துலங்க
காமர்மகிழ்சேர வந்த தாரையா—யெங்கள்
கருப்பண சாமியென்பார் நீரையா (78)

மனிதர் தேவர்தனை வணங்கவந்தருள் செய்சுந்தரவேள்
வள்ளலாம் கருப்பணவே ளாரையா—இங்கு
வந்தவர்நீரே கடைக்கண் பாரையா (79)

கணிவுடையர் போற்றவருள் கண்ணன் முன்றில்நண்ணிருவரும்
காரணனுகும் பெருமன் யாரையா—எங்கள்
கர்த்தனுன மூத்தையனும் நீரையா (80)

தேசமெங்கும் வாழ்வுபொங்க மாசமும்மாரி பொழியும்
சிறப்பருள வந்ததுரை யாரையா—யெங்கள்
சித்தமகிழ்செய் பெருமான் தானையா (81)

காசிகன்னியாகுமரி தேசுறு மூலமெல்லலாம்
காத்தளிக்க வந்ததுரை தானையா நல்ல
கருப்பணசாமி யென்பார் நானையா (82)

கஞ்சனைமுன் அஞ்சவென்ற கண்ணன் விண்ணோர் அண்ணல்வாயில்
காத்தருள் செய்மூர்த்தியானோன் தானையா
பேர்செய்—கருப்பணசாமியென்போனுனையா (83)

பாரினிலெனைத்துதிப்போர் பாக்கியம் பொருந்தவருள்
பண்ணும் பதினெட்டாம்படியாள் வரன்
தன்னை—பத்தியுடனே துதிப்போர் வாழியே (84)

சிவமயம்.

மந்திரஞ்சேர் சோலைமலை வாழுங் கருப்பணன்மேற்
செந்தமிழ் யான்பாடச் சிறந்த கொன்றை—இந்துவுடன்
கொந்துசடை கொண்டருளுங் கோமானரன் புதல்வன்
கந்தன் முன்னோன் தந்தி முகன் காப்பு.

காருலவு மௌலியிற் சந்த்ர காவிப்பெரிய
காங்கினுருமால் வானில் வாழ்
கதி ரொளிதரப் பெருமை வளர் தரு கிரீடமும்
காண்டீப விற் புருவமும்
தாருலவு கண்டமும் யிரு குழையிலே பூண்ட
தங்கக் கடுக்க னழகும்
தாமரை மலர்க்கு நிகரான முகமுங்கனி
தனைப் பழிக்கின்ற வாயும்
வாருலவு மார்பிலே நவரெத்ந மாலையும்
மந்த்ரகிரியான புயமும்
வண்டப் பிசாசுகளை மார்பைப் பிளக்கின்ற
வாள் பிடிக்கின்ற கரமும்
சீருலவு மிடையினிற் கச்சையுங் கிண்கிணி
திருப்பதங் காண்க வருவாய்
திருவது துலங்குமிரு நவபடி விளங்கிவளர்
செய கருப்பண சாமியே (1)
இருகாலிலே வீரதண்டை பொற் கொலுசுடன்
ஏற்ற கிண்கிணிகளாட
யிடைதனிற் கச்சையும் அதிலிட்ட குஞ்சமும்
இசைவான மணிகளாட
மருவணியு மார்பிலே நவரெத்ன மாலையொடு
வயிரப் பதைக்கமாட
மந்திரகிரி போலிரு புசங்களாடக் கையில்
வாங்கருவாள் பாங்கினுட

முருகணிந்திடு குழைக்காதினில் விளங்கு சொரி
 மூத்துக் கடுக்கனுடை
முருக்கிவிடு வீசையும் படபடென வேயாட
 மோகனக் காளியோட
சிருது கூளிகள் வந்து விருதுகள் படித்திடச்
 செந்தமிழ்க் குதவ வருவாய்
திருவது துலங்குமிரு நவபடி விளங்கிவளர்
 செய கருப்பண சாமியே (2)

மூன்று மதமும் பொழிந்திடு வேழமுகவனை
 மோதி நிர்த் தூளிபண்ணி
முருக னென்பவனையும் கைலை தனிலேகிட
 முள்ளம்பினு லெறிந்து
தோன்று ரணகால வைரவனையுஞ் செங்கரச்
 சூரிகொண்டே கிழித்து
தூங்கினும் தேவ ராசனையும் வச்சிரந்
 தோன்று தண்டாலடித்து
தாண்டவம தாடிமுன் தக்கனிட சாலையிற்
 தவழ் தலையெலா மறுத்து
தலையெலா மோமகுடம் தனிலேறி நற்றவர்கள்
 தன்னுடைக் குருதியுண்டு
தீண்டவரு வீரரைவதைத்த ரணிவீரன்
 சினேகிதம் பிரியாதவர்
திருவது துலங்குமிருநவபடி விளங்கிவளர்
 செய கருப்பண சாமியே (3)

நாலுகாலினும் வீரதண்டை களணிந்ததில்
 நவரெத்ந கொலுசணிந்து
நகநகெனு வீரகண்டாமணி தரித்ததில்
 நற்சிலம் பொலியணிந்து
வாலதின் முளைக்கின்ற ரோமமதிலேமுத்து
 வயிரமுங் கோர்வையிட்டு

மாகதத் தாலிழைத்திடு சேணமுதுகினில்
வைத்தங் கவடி தரித்து
சாலுவைதரித்துக் கலிக்கத்து ராயுஞ்
சலங்கை மாலையுமணிந்து
தங்கமிகு கடிவாளமிட்டு பத்மாகமிது
தானென்று பேருமிட்டு
சீலமுடன டனமிடு பரிமேலெழுந்துவரு
சிங்கக் கருப்பனீயே
திருவது துலங்குமிரு நவபடி விளங்கிவளர்
செய கருப்பண சாமியே (4)

அஞ்சுவர்னக் குடையிலாயிரம் ரெத்தினம்
முத்துநற் குடையாயிரம்
அலங்கிருதமான முத்துக்குடை நூறுயிரம்
அழகுபெறவே நெருங்க
கஞ்சனக் கருவியது முதலான மேளங்கள்
கடலோசைபோற் றொனிக்கக்
கவரியது வீசிடப் பூதவேதாளங்கள்
கட்டியங்கூறி வரவே
பஞ்சப் பிசாசுகளை வச்ர தண்டத்தினல்
பல்லுதிர வேயடித்துப்
பரிமேலெழுந்து வரு முத்தையனே யுனது
பாதமலர் போற்றி செய்தேன்
செஞ்சொற் றமிழ்க்குதவ வந்துநின் கிருபைசெய்து
தீனனைக் காத்தருள் செய்வாய்
திருவது துலங்குமிரு நவபடி விளங்கிவளர்
செய கருப்பண சாமியே (5)

ஆரூருமுத்திரை செந்தி திருநெல்வேலி
அமராபதி திருக்கோஷ்டியூர்
ஆட்டானை வேடகம் முத்தாரு மேலைமலை
யாளமது விருதுகொண்டு

பேருதவு தங்கமலர் நேமம் நெல்லைநகர்
பிரசையூர் வேலைநகரும்
பேரை நகர் புத்தூரு சங்க மதுராபுரி
பெருந்துறை திருப்புவனமும்
காரூரு கண்ணனூ ரிளசைநகர் பொன்மருவு
காளைநகர் சிவகங்கையும்
காரைநகர் சதுர்வேதமங்கலம் பிரசையூர்
கடையூரு தள்ளாகுளம்
சீரூரு சோலைமலை யேழுலகமும் புகழ்செப்
சிங்கமே முத்தய்யனே
திருவது துலங்குமிரு நவபடி விளங்கிவளர்
செய கருப்பண சாமியே (6)

ஏழுலகமும் புகழ்தீர்த்தமும் பொன்கிரிக்
கிணையான சோலைமலையும்
யேழைகட்கதிகமாம் வரமளிக்கின்ற பதி
னெட்டாம்படிப் பெருமையும்
வளம்பொருந்திய கமுகுகுலை முகில் கிழித்திட
சோலைவட்டவளமும்
வையகமெலாம் புகழும் வளமருவு குளமுடன்
வாவியுங் காவினழகும்
நளவிஸ்வகர்மனல் நன்னயமதாய்ச் செய்த
நற்றிருப்பணி யினழகும்
நாராயணன் மகிமை வையமலிசேடனவ
னலையும் சொல்ல வெளிதோ
செழுமலர்ப்பாத முன்னடியார்கள் போற்றவே
தேவனே யென்முன் வருவாய்
திருவது துலங்குமிரு நவபடி விளங்கிவளர்
செய கருப்பண சாமியே (7)

எட்டுதிக்கதிரவாய் விட்டலறு பூதங்கள்
யெச்சரிக்கைகள் சொல்லவும்
யெதிரிட்ட பூதப் பிசாசு வேதாளங்கள்
இருபதத்திற் பணியவும்

துஷ்டப் பிசாசுகள் மிரண்டோடி வீறிடத்
துண்டு துண்டா நறுக்கித்
துலங்கு வெண்குடையது நிகழ்ந்திடத் திருமருவு
சோலைமலை விட்டிறங்கி
வட்டமிடு பரியின்மே லேறிவந்தடியார்கள்
மனத்துயர் விலக்கிமிகவே
வரமதையளித்திட்ட கார்மேக வண்ணனே
வரவேண்டு மிதுசமயமே
சிட்டர்புகழ் வைகுந்த வாசமா தவனுடைய
சேயநின் கிருபைதருவாய்
திருவது துலங்குமிரு நவபடி விளங்கிவளர்
செய கருப்பணசாமியே (8)

ஒன்பதெனும் நவரெத்னமாலைகள் துலங்கிடவும்
ஒட்டியாணந் துலங்க
உலகேழும் விலைபெற்ற நவச குண்டல முருகு
உனது காதினிலிலங்க
கம்பளப் பில்லி வஞ்சனை யேவல் சூனியங்
கட்டுவிட் டோடிவிடவும்
கண்டித்து வருகின்ற ஏவல் பிசாசுகளை
கைவாளினால் வதைத்துக்
கொம்பு சேகண்டி மத்தாளந் தொனித்திடக்
கூடியது விருதுகூறக்
கொல்லிமலை தனைவிட்டு வந்தவடி யார்களின்
குடிகாத்துவரமளிக்க
செம்பவள வாயது திறந்துதா னின்கிருபை
செய்து ரட்சித்தாளுவாய்
திருவது துலங்குமிரு நவபடிவிளங்கிவளர்
செய கருப்பண சாமியே (9)

பத்துமிரு நான்குபடி மேவு முத்தையனே பரம நித்தன் மருகனே
பங்கயஞ் சோழகர் வாசற் பிரதானியே பக்தர்க்கிரங்கு முதலே
முத்தையனே யுனதுமுன் சாமிநாதன் மொழியும் விண்ணப்ப
மொன்று

முன்மடுவில் நீர் பொசிக்கின்ற தந்தியை முதலையது தான்பிடிக்க
கர்த்தனே ஆதிமூலமே யென்றும் மதங்கரி முறையரிக்கையிட்ட
காரண மறிந்தந்த ஆதிமூலமே வந்து காத்தருளினது போலவே
சித்தனே யுனதடிமை குடிகாத்திடப் பெரிய தேசியதின்
மேல் வருகுவாய்

திருவது தலங்குமிரு நவபடி விளங்கிவளர்
செய கருப்பண சாமியே

(முற்றுப் பெற்றது.)

உ

சிவமயம்.

கோத்தங் கருப்பண்ண சுவாமிபேரில் பாடிய
ஆசிரிய விருத்தம்

சந்தணங் களப கஸ்தூரி களணிந்திடும்
தர்மகுண கார்மேகமே
சகல மானிடவர்க்கும் கண்ட தெய்வம் நீ
சதுர்மறை யணிந்தநீலம்
தந்திர வல்ல வேட்டுடன் கருங்கச்சை காங்குழதல்
தனியான சிகப்பணிந்த
தலையிலுரு மாலுடன் தன்கை யுள்ளாயுதம்
தக தகென சோதிமின்ன
அந்த வொலி மிகவுள்ள காலினிரு தண்டையும்
அண்டங்கள் தத்தளிக்க
அனைவருந்திடுக் கிடக்கையின ரிவாள்கொண்டு
ஆகாச புரவியேறி
வந்திடும் கார்மேக நீல நிறவண்ணனே
வளர்பச்சை வாங்குமையா
வளந்தனில்க் கல்கட்டு மண்டபந் தன்னிலே
வளர் கொத்தங் கருப்பணசாமியே (1)

கட்டழகு மண்டபம் சுற்று திருமதில்களும்
கனமான சிங்காரமும்
கயிலாச மேருபோல் கொத்தங்காட்டு வளந்தனில்
காத்தருளும் அழகப்பனும்
கார்மேக சுரூபனும் கருப்பண சுவாமியும்
கனமான முப்பாட்டியும்
கண்கொண்ட சன்னாசி சின்னக் கருப்பரும்
கனமான முன்னோடியும்
மடத்துவாசல் ஆங்கார முனியனும்
வாசல்ப் பிரதானியுடனே

வளர்கின்ற கார்மேக நீல நிறவண்ணனே
வறுமைகள் தீருமையா
வாரமதில் ஞாயரில் உலகத்து மானிடவர்
வருகிறார் உமைத்தேடியே
வந்துதான் பச்சைக்கி நெல்க்கழுவி உணர்த்தியே
வருகின்ற திங்களதனில் (2)

சட்டமுடனுகவே உன்னுடைய சன்னதியில்
சகல ஆசாரமுடனே
சர்க்கரைப்பாகு மாவுடன் கலந்துமே
தனியாகவேக வைத்து
சன்னதியின் வாசலில் தலைவாழை யிலையுடன்
சதிரான பச்சையிட்டு
சனம் வந்துகூடியே சாம்பிராணி வாசனைகள்
தானது புகைத்திடவுமே
திட்டமுட னன்னடைத் தானிகள் பேரில் சன்னதம்
திறமாக வந்து நீயும்
திசைய திரவாய் விட்டதட்டியே தச்சுருப
நீலமே காட்சி தருவாய்
திகழ்கின்ற யோகனே கொத்தங்காட்டு வளமதில்
செல்வது தியோகபானே
செங்கண்மால் மருகனே அழகப் பெருமாளெனும்
சிங்கார கொத்தங் கருப்பண சாமியே (3)

உரிமைக் கருப்பனொடு சோணைக் கருப்பனும்
உயர் தோடிக் கருப்பன்
உயர் அழகர் கோயில் பதினெட்டாம் படித்துறை
உறங்கா புளிக்கருப்பன்
அருமைக் கருப்பன் மலையாளக் கருப்பனிசை
அமராபதிக் கருப்பன்
அலைகடலினீருண்ட உருண்டை மேகங்களும்
அருண்ட மேனிக் கருப்பன்
கடுமைக் கருப்பன் மிகு சமையக் கருப்பன்
கடுஞ் சங்கிலிக் கருப்பன்

கட்டாணி முத்துக்கருப்பன் சொரிமுத்துக்
கருப்பன் கருப்பனெனவே
பெருமைக் கிசைந்து வெகு பேரிட்டு விளையாடும்
பேர்கொண்ட நீ யொருவனே
பெருந மலைப் புனல்வாழ்வு திகழ்பனைசைப் பதிமேவு
பெரிய கருப்பண சாமியே (4)

கட்டழக வுன்னுடைய காயாம்பூ மேனியும்
கார்மேக வர்ண நிறமும்
காலிட்ட தண்டையொலி கிண்கிணி சிலம்பசைய
கலகலென மணியோசையும்
இட்ட சல்லடமீது கட்டி வருநச்சையும்
இருக்கி விடுதொங் கலழகும்
இடையிலொரு சமுதாடு கட்டாணி நேரிசைய
இசைவளரு சிங்காணியும்
சட்டமுட னணிவல்ல வேட்டினுல் லாசமும்
சரிகையிடு சோமனழகும்
தளதளென வேமாறி வரிசையொடு பூணூல்
சரப்பளி பதைக்கமுடனே
பொட்டிட்ட கஸ்கூரி சந்த்ர காவியுடனே வந்து
பேருலவு காட்சிதருவாய்
பெருகு சிங்கப் பதிமேவு வருசமுத் துரையான
பெரிய கருப்பண சாமியே (5)

காலிலிரு தண்டையும் கிண்கிணி சிலம்பசைய
கார்மேக வண்ணரூபா
கையினிற் பந்தமும் உளன்று பேரம்புமுதல்
கனமாக வேயெடுத்து
சாலமுடன் வருகுவாய் உந்தனுட பாதமலர்
சத்தியாய் பணிந்தபேர்க்கு
சகலகுண சம்பன்ன புத்திரர்கள் சத்பாக்யம்
தானது கொடுத்து மேலும்
வாலாடமாகவும் அதிகமாய்ச் சம்பத்து
வளரமென் மேலும் வைப்பாய்

வையக மதன்னிலே யுன்னுடை சன்னதியில்
வருகின்ற மானிடர்க்கு
மேல்வரும் பிணிகளைச் சாம்பிராணி வாசத்தின்
வெகுதுலே தூரத்திவைக்கும்
மெஞ்ஞானக் கொத்தங் காட்டையனே லோகத்தில்
மெஞ்ஞானக் கருப்பண சாமியே (6)

கட்டாரீ வெட்டம் புகையில்ப் பிரம்பு முதல்
கலகலென ஓசையதிரும்
காலிட்ட தண்டையும் மேலில் வருகச்சையும்
கனமான தொங்கலழகும்
வட்டமிடு நெத்தியில் கஸ்தூரி பொட்டழகும்
மார்பில் பதைக்கமுடனே
வருஷமொரு ஆண்டினில் பெரும்பூசை தன்னிலே
வருகுவாய் கார்மேகமே
சட்டமுட னுகவே உன்னுடைய சன்னதியில்
சனம்வந்து கூடிநிற்க
தாட்டீகமாகவே கேட்ட வரமருள் செயும்
தனம்பெற்ற நீலமேகம்
இட்டமுட னென்மீதில் ஆசிரிய விருத்தமா
யியம்பினேன் கார்மேகமே
ஏகஉல்லாசனே கொத்தங் காட்டில் வளரும்
இயல்பெரிய கருப்பணசாமியே. (7)

சந்தணங் களபகஸ்தூரி குங்குமம்மீது
சவ்வாது பொட்டுமிகவே
சாந்து பரிமளம் புனுகு கற்பூர தீபமும்
சாம்பிராணி வாசமிக்க
மந்தார முல்லையொடு சண்பகம் புன்னையும்
மல்லிகை மருக்கொழுந்தும்
மகிழம்பூ செவ்வாளி வெட்டிவேர் விளாம்பிச்சி
வங்காளம் பச்சையுடனே
கொந்தார குடமல்லி செங்கழுனி மாலையும்
கொடிமல்லி வாசங்களும்
குமுகுமு கமகமெனத் தெய்வீக வாசமாய்
கொண்ட கார்மேகவண்ணு
கடம்பவனம் வாழ்கின்ற காயாம்பு மேனியை
கல்க்கோட்டையூர்க் கதிபனே

கடம்பனே முத்தனே சித்தனே குருந்தடிக்
கொத்தங் கருப்பண சாமியே (8)

தீவெட்டி யுடன்மிக்க பகவெட்டி நிறையிட்ட
சிங்காரம் ஒருபாரிசம்
தீபமுட னும்புகை சாம்பிராணி வாசமொடு
தெய்வநிறை யொருபாரிசம்
வாய்விட் டதட்டியே திருட்டுப் பிசாசுகளை
வகைகேழ்ப்ப தொருபாரிசம்
வகைகேட் டிருக்கியே சவுக்கடியினல் மாறு
மாறென்ப தொருபாரிசம்
நீவிட்டு விடுசாமி நான்போறே னென்றுபேய்
நின்றழுவ தொருபாரிசம்
கட்டாய மாகவே கைகூப்பி யொருபுரம்
காணு து போவதொருபால்
பேய்வெட்டு காளைமேல் சன்னதம் நன்னயம்
பெறவீற் றிருந்ததுரையே
பெருகுசிங்கப் பதிமேவு வரிசைமிகு துரையான
பெரியகருப்பண சாமியே. (9)

கரும்பூனை கருநரி கருங்கடாய் கருமந்தி
கருநாய் கருங்காடிபோல்
கனதொழிலிடும் பேய்கள் தனிவழி யிருட்டிலே
கண்ணிலே விஷங்கடிக்க
வரும்போது முத்துக் கருப்பே கருப்பையா
வாவென்று சொலவருகுவாய்
மனதில் பிசாசுகளை சருவிப் பிடித்துவெகு
வாதைப் படுத்திவைப்பாய்
தரும்பூசை யென்னதடா தம்பிகொண் டாடுமொரு
சண்டிப் பிசாசுகளைநீ
சாட்டையடி வலுவினல் மூட்டுமூட் டெனபொருது
தவிடுபொடியாய் நொறுக்கி
பெரும்பூதமும் தொட்டதொரு பேய்களைப்பின்
பிளந்தோட்டி விடுவையையா
பெருகமலைப் புனல்வாழ்வு திகழ்பனசப் பதிமேவு
பெரியகருப்பண சாமியே. (10)

முற்றிற்று.


குமரன்.